[*2022 அக்டோபர் 18*

7. அரசினர் தனித் தீர்மானம்

ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில் இந்தி மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்பன உள்ளிட்ட அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்றக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஒன்றிய அரசினை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற கொள்கைக்குச் சொந்தக்காரர்களாகிய நாம், அன்னைத் தமிழைக் காப்பதற்காக மட்டுமல்ல; ஆதிக்க மொழித் திணிப்புக்கு எதிராக என்றும் குரல் கொடுப்பவர்கள் என்ற அடிப்படையில், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் முன்மொழிவதற்கு முன்பாக ஒரு முன்னுரையை வழங்க விரும்புகிறேன்.*

தமிழ் காக்க சிறை சென்று மரணம் அடைந்த நடராசன்–தாளமுத்து தொடங்கி, தீக்குளித்த கீழப்பழுவூர் சின்னச்சாமி, துப்பாக்கிக் குண்டுக்குப் பலியான சிதம்பரம் ராசேந்திரன் வரையிலான தியாகிகளை இந்த நேரத்தில் நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும் என நான் நினைக்கிறேன்.

மொழி என்பது, நமது உயிராய், உணர்வாய், விழியாய், நம் அனைவரின் எதிர்காலமாய் இருக்கிறது. அத்தகைய நம் தாய் மொழியை வளர்க்கவும், பிறமொழி ஆதிக்கத்தில் இருந்து காக்கவுமே திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது. தோன்றிய காலம் முதல், இன்றுவரை தமிழ் மொழிக்கான ஒரு தனிப்பெரும் பாதுகாப்பு இயக்கமாகவே செயல்பட்டு வருகிறது.

முற்பகல் 11–55

1938 ஆம் ஆண்டு முதல் இந்தி மொழித் திணிப்பு தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நாமும் எதிர்த்துக் கொண்டே இருக்கிறோம். ஆதிக்கச் சக்திகளும் விடுவதாக இல்லை; நாமும் விடுவதாக இல்லை. இது வெறும் மொழிப் போராட்டம் மட்டுமல்ல; தமிழினத்தை, தமிழர் பண்பாட்டைக் காக்கும் போராட்டமாக

2022 அக்டோபர் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

நாம் தொடர்ந்து கொண்டு இருக்கிறோம்; தொடரவே செய்வோம் என்று இந்தப் பேரவையின் வாயிலாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு நான் உறுதி அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசானது, இந்தி மொழியைத் திணிப்பதை தனது வழக்கமாகவே வைத்துள்ளது. ஆட்சி நிர்வாகத்தில் இந்தியைத் திணிப்பது தொடங்கி, கல்வி மூலமாகத் திணிப்பது வரை, தாங்கள் ஆட்சிக்கு வந்ததன் நோக்கமே இந்தியைத் திணிப்பதுதான் என்று நினைக்கிறார்கள்.

"ஒரே நாடு-ஒரே மதம்-ஒரே தேர்தல்-ஒரே தேர்வு-ஒரே உணர்வு-ஒரே பண்பாடு" என்ற வரிசையில் ஒரே மொழியை வைத்து, மற்ற தேசிய இன மக்களின் மொழிகளை அழிக்கப் பார்க்கிறார்கள். இந்தியா என்பது, பன்முகத் தன்மை கொண்ட நாடு. பல்வேறு இனங்கள், மொழிகள், மதங்கள், பண்பாடுகள் கொண்ட மக்கள் வாழும் நாடு இந்தியா. வேற்றுமையிலும் ஒற்றுமை கண்டு, சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வருகிறோம். விடுதலை பெற்ற இந்தியா, ஓராண்டுகூட ஒற்றுமையாக இருக்காது என்று வெளிநாட்டுப் பத்திரிகைகள் எழுதிய நிலையில், நமது பன்முகத் தன்மையை காப்பதன் மூலமாக இந்தியா எழுபத்தைந்து ஆண்டுகளாகக் காப்பாற்றப்பட்டு வருகிறது.

பல்வேறு மொழியினர் வாழும் நாடு இது. ஆனாலும் மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டதால், அனைத்து மொழியினரும் மனநிறைவோடு வாழ்ந்து வருகிறார்கள். பல்வேறு மத நம்பிக்கையாளர்கள் இருந்தாலும், இந்தியா மதச்சார்பற்ற நாடாகவே அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பல்வேறு மொழி பேசுபவர்களின் நாடாக இருந்தாலும், ஒரு மொழியின் ஆதிக்கம் இருக்காது என்பதை இந்தியாவை ஆட்சி செய்த பிரதமர்கள் உறுதிப்படுத்தி வந்திருக்கிறார்கள். 'இந்தி பேசாத மக்கள்மீது இந்தி மொழி திணிக்கப்படாது. அவர்கள் விரும்பும்வரை, ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கும்' என்று பிரதமர் நேரு அவர்கள் அளித்த உறுதிமொழிதான் இன்றுவரை இந்தி பேசாத பெரும்பான்மை மக்களைக் காக்கும் அரணாக இருக்கிறது.

அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கியதாக ஐந்தாண்டுத் திட்டங்களும், பொதுத் துறை நிறுவனங்களும் அமைக்கப்பட்டன. இப்படி நடந்ததால்தான், எல்லையால் மட்டுமல்ல;

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 அக்டோபர் 18

எண்ணங்களாலும் ஒற்றுமை கொண்ட நாடாக இந்திய நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையிலான செயல்கள் அண்மைக் காலமாக நடந்து வருகின்றன. இதில் மிக மிக முக்கியமானது, இந்தி மொழித் திணிப்பு. இந்தி மொழித் திணிப்பை பட்டவர்த்தனமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்கிறது. இந்தி மொழி தினம் கொண்டாடும் ஒன்றிய அரசு, மற்ற மாநில மொழிகளின் தினம் கொண்டாடுவது இல்லை. இந்தி மொழிக்குத் தரப்படும் முக்கியத்துவம் என்பது, மற்ற மொழிகளைப் புறக்கணிப்பதாக மட்டுமில்லை; அழிப்பதாகவும் அமைந்திருக்கிறது.

இந்தியை ஆட்சி மொழியாக, அலுவல் மொழியாக மட்டுமல்ல; அதிகாரம் செலுத்தும் மொழியாகவும் பா.ஜ.க. அரசு உயர்த்திக் கொண்டு இருக்கிறது. மேலாதிக்கம் செலுத்தும் மொழியாக அதனை மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். இந்தியும், ஆங்கிலமும்தான் அலுவல் மொழியாக இத்தனை காலம் இருந்துவரும் நிலையில், ஆங்கிலத்தை மொத்தமாக அகற்றப் பார்க்கிறது பா.ஜ.க. அரசு.

இந்த வரிசையில் கடந்த 13 ஆம் நாளன்று, ஆங்கில ஊடகங்களில் சில செய்திகள் வெளியாகி உள்ளன. அவை நமக்குப் பெரும் கவலை அளிப்பதாக உள்ளன. மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட அலுவல் மொழிக்கான நாடாளுமன்றக் குழுவின் அறிக்கையானது, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருப்பதாக அச்செய்தி கூறுகிறது.

நாட்டில் உள்ள இந்தி பேசும் மாநிலங்களில், இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் (ஐ.ஐ.டி.), மத்திய பல்கலைக்கழகங்களில், கேந்திரிய வித்யாலயா கல்வி நிறுவனங்களில் பயிற்று மொழியாக இந்தி இருக்க வேண்டும் என்றும், போட்டித் தேர்வுகளில் கட்டாயம் ஆங்கில மொழி வினாத்தாள் நிறுத்தப்பட வேண்டும் என்றும், இந்தியில் பணிபுரியாத அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் எச்சரிக்கப்பட வேண்டும் என்றும், ஒன்றிய அரசின் பணியாளர் தேர்வில் தேர்வாளர்களின் இந்தி மொழி அறிவை உறுதி செய்ய வேண்டும் என்றும், ஒன்றிய அரசின் அலுவலகங்கள், அமைச்சகங்கள், கடிதங்கள் போன்றவை இந்தி மொழியில் இருக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்துள்ளார்கள் என்று செய்திகள் மூலமாக தெரிய வருகிறது. முழுக்க முழுக்க இந்தியின் ஆதிக்கத்தை வலுப்படுத்தும் அறிக்கையாக இது அமைந்துள்ளது.

2022 அக்டோபர் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

நண்பகல் 12-00

இந்தி பேசும் மாநிலங்களில் இந்தியை வலுப்படுத்தும் போர்வையில் இந்தியா முழுவதும் இந்தியை வலுப்படுத்தவே துடிக்கிறார்கள். கேந்திரிய வித்யாலயா பள்ளி முதல் ஐ.ஐ.டி. வரை இந்தி மட்டும்தான் என்றால், மற்ற மொழி மக்களுக்கும் இந்தக் கல்வி நிறுவனங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தடுக்க நினைக்கிறார்கள். ஆங்கிலத்தை முற்றிலுமாக தடுப்பதன் மூலமாக, ஆங்கில அறிவையே முற்றிலுமாகத் தடுக்கிறார்கள். மாநில மொழி என்று ஒப்புக்காகச் சொல்கிறார்களே தவிர, முழுக்க முழுக்க இந்திக்காகவே துடிக்கிறது அவர்களது இதயம்.

மாநில மொழிகள்மீது இவர்கள் இவ்வளவு பற்று வைத்திருப்பது உண்மையானால், அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளையும், இந்திக்கு இணையான ஒன்றிய அரசின் அலுவல் மொழிகளாக அறிவிக்கத் தயாரா என்று நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்துத் தேர்வுகளிலும் கட்டாய ஆங்கில மொழி வினாத்தாள் இருப்பதைக் கைவிடச் சொல்வதன் மூலமாக, அனைத்து இந்தியத் தேர்வுகளையும் இந்திமயமாக்கத் துடிக்கிறார்கள் என்பதே தெரிகிறது. இந்தி தெரியாதவர்கள் ஒன்றிய அரசுப் பணி பெறமுடியாத வகையில் இந்தப் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன என்று கருதவேண்டி உள்ளது. இனி நடக்கும் அனைத்துத் தேர்வுகளும் இந்தியில்தான் என்று சொல்வதன் மூலமாக, இந்தி பேசும் மாநில மக்களுக்கு மட்டும்தான் இனி அனைத்திந்திய பணி இடங்கள் என்பதை வெளிப்படையாக அறிவித்துவிட்டார்கள்.

"பணியாளர் தேர்வுகளுக்கு நடைபெறும் போட்டித் தேர்வுகளின் வினாத்தாள்களில் ஆங்கில மொழியை அறவே நீக்கிவிட்டு, இந்தி மொழியில்தான் வினாத்தாள் இருக்க வேண்டும் என்பதை சட்டபூர்வமாக்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளோம்" என்று இக்குழுவின் துணைத் தலைவரான திரு. பர்த்ருஹரி அவர்கள் கூறியிருக்கிறார். இது எங்கே போய் முடியும் என்றால், இந்தி பேசாத மாநில மக்களை மொத்தமாக தேசிய நீரோட்டத்திலிருந்து அந்நியமாக்குவதில் போய்தான் முடியும். ஆங்கிலத்தை அகற்றுவதே இந்தியை அந்த இடத்தில் அமர்த்துவதற்காகத்தான்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 அக்டோபர் 18

முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தன்னிடம் சொன்னதாக தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுவார். "சட்டமன்றத்தில் ஆங்கிலத்துக்கு எதிராக சிலர் பேசியபோது, முதலமைச்சர் காமராசர் அவர்கள் எங்களிடம் காதில் இரகசியம்போலச் சொன்னார். 'ஆங்கிலத்தை எதிர்த்தீங்கன்னா, அந்த இடத்துல இந்தி வந்து குந்திக்கும்னேன்' என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு பெரிய அரசியல் பாடத்தை அவ்வளவு எளிமையாக காமராசர் அவர்கள் சொன்னார்கள் பார்த்தீர்களா?" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு ஆங்கிலத்தை அகற்றுவதற்குப் பின்னால் இந்தியைக் கொண்டு வந்து உட்கார வைக்கும் மறைமுகத் திட்டம்தான் இருக்கிறது என்பதை இம்மாமன்றத்தில் அழுத்தம் திருத்தமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

1968, 1976 ஆம் ஆண்டுகளில் அலுவல் மொழி தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், அதனடிப்படையிலான விதிகளின்படி ஒன்றிய அரசுப் பணிகளில் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்தகைய ஆங்கிலத்தை அகற்றுவது எப்படிச் சரியாக இருக்க முடியும்? தற்போதைய நிலையில், அறிவியல் வளர்ச்சியையும் தொழில்நுட்ப வசதிகளையும் கவனத்தில்கொண்டு, எட்டாவது அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளையும் இந்திக்கு இணையான அலுவல் மொழியாக்குவதே ஒன்றிய அரசின் நோக்கமாக இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, ஆங்கிலத்தையும் நீக்கிவிட்டு, இந்தியை மட்டும் வைப்பது அரசியல் சட்டத்தை மதிக்காத தன்மையாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட 22 மொழிகளுக்கும் சம வாய்ப்பு, சம உரிமை வழங்கி, அந்த மொழிகளை இந்திய நாட்டின் ஆட்சி மொழி மற்றும் அலுவல் மொழிகள் ஆக்கிட முயற்சிகள் எடுக்க வேண்டும். அதை விட்டுவிட்டு முழுக்க முழுக்க இந்திமயமாக்குவது சரியா என்பதுதான் நாம் எழுப்பும் கேள்வி.

பிற்பகல் 12-05

தமிழ்நாட்டின் மொழிக் கொள்கை என்பது, தமிழும், ஆங்கிலமும் என்ற இருமொழிக் கொள்கை. தமிழ் மொழி இந்திய

2022 அக்டோபர் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஏற்கப்பட வேண்டும். மாநில ஆட்சி மொழிகள் அனைத்தும் இந்திய அரசின் ஆட்சி மொழியாக ஆக வேண்டும். இந்தி பேசாத மாநில மக்கள்மீது இந்தி மொழி எந்த வகையிலும் திணிக்கப்படக் கூடாது. இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் தொடர வேண்டும். கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் இந்தி தெரிந்தவர்களுக்கு மட்டுமே சாதகமான வழிவகைகள் செய்யப்படக் கூடாது. அது நம் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானதாக அமைந்துவிடும்.

தமிழகத்தில் இயங்கும் ஒன்றிய அரசின் அலுவலகங்களில் இணை அலுவல் மொழியாக தமிழை அங்கீகரித்து, அனைத்து அலுவலகச் செயல்பாடுகளும் தமிழிலேயே இயங்க உரிய சட்டத் திருத்தம் செய்ய வேண்டும். சென்னை உயர் நீதிமன்ற வழக்காடு மொழியாக தமிழை ஆக்க வேண்டும். இவைதான் நமது மொழிக் கொள்கை. இந்தித் திணிப்பை எதிர்ப்பதும், நீட் தேர்வு, புதிய கல்விக் கொள்கையை நிராகரிப்பதும் இதனால்தான் என்பதை இந்த மாமன்றமும், தமிழ்நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள்.

இந்தி மொழி பயன்பாடு அடிப்படையில் இந்தியாவை இவர்கள் மூன்றாகப் பிரிக்கப் பார்க்கிறார்கள். இந்தி மொழி பயன்பாடு அதிகம் உள்ள மாநிலங்கள், இந்தி மொழி பயன்பாடு குறைவான மாநிலங்கள், இந்தி பேசாத மாநிலங்கள் என்று மூன்றாக இந்தியாவைப் பிரிக்கிறார்கள். நாம் மூன்றாவதாக இருக்கிறோம். ஆனால், பெரும் மொழி மற்றும் பண்பாட்டிற்குச் சொந்தக்காரர்களாகிய நம்மை மூன்றாம்தர குடிமக்களாக ஆக்கிவிடப் பார்க்கும் முயற்சிகளுக்கு நாம் எதிர்க்குரல் எழுப்பிட வேண்டும்.

இந்திக்குத் தாய்ப்பாலும், இந்தியாவின் மற்ற மொழிகளுக்குக் கள்ளிப் பாலும் புகட்ட நினைப்பது, இந்திய அரசியல் சட்டத்திற்கு எதிரானது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்குப் பேராபத்தை விளைவிக்கக்கூடியது என்பதால் பின்வரும் தீர்மானத்தை நான் மொழிகிறேன்:

"ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சராகவும், அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்றக் குழுத் தலைவராகவும் உள்ள மாண்புமிகு திரு. அமித்ஷா அவர்கள் தலைமையிலான குழு சமீபத்தில் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களிடம் அளித்துள்ள அறிக்கை இன்று நாடு முழுவதும் விவாதத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 அக்டோபர் 18

குறிப்பாக, தமிழ்நாடு உள்ளிட்ட இந்தி பேசாத மாநில மக்களுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும் வகையிலும், இந்த நாட்டின் பிரதமராக இருந்த திரு. நேரு அவர்கள் அளித்த வாக்குறுதிக்கு முரணாகவும் பல பரிந்துரைகளை அளித்துள்ளது.

அந்தப் பரிந்துரைகளில்,

- ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களான ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., எய்ம்ஸ் மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் ஆங்கிலத்திற்கு பதில் இந்தி மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும்;
- இந்தியை பொது மொழியாக்கிடும் வகையில், தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத கல்வி நிறுவனங்கள், கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் உள்ளிட்ட ஒன்றிய அரசின் அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் இந்தி மொழியே பயிற்று மொழியாக ஆக்கப்பட வேண்டும்;
- இளைஞர்களின் வேலைவாய்ப்பில், கட்டாயத் தாள்களில் ஆங்கிலத்தை நீக்கி விட்டு, இந்தியை மட்டுமே முதன்மைப்படுத்த வேண்டும்;

என்பன உள்ளிட்டவையும் அடங்கும்.

இப்படி ஆங்கிலத்தைப் புறந்தள்ளி, அரசமைப்புச் சட்டத்தின் 8–வது அட்டவணையில் உள்ள இந்தி பேசாத மாநில மக்களின் 22 மாநில மொழிகளையும் அடியோடு ஒதுக்கி வைத்து, எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கும் வகையில், அரசமைப்புச் சட்டத்தின் கூட்டாட்சிக் கொள்கைகளுக்கு எதிரான, நம் நாட்டின் பன்மொழிக் கட்டமைப்பிற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் அளிக்கப்பட்டுள்ள இந்தப் பரிந்துரைகளை ஏற்கக் கூடாது, நடைமுறைப்படுத்தக் கூடாது என மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு 16–10–2022 அன்று தமிழக அரசால் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

இந்த மாபெரும் அவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்து நிறைவேற்றிய இரு மொழிக் கொள்கை தீர்மானத்திற்கு எதிராக, பிரதமராக இருந்த திரு. நேரு அவர்கள் இந்தி பேசாத மாநிலங்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு மாறாக, 1968 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் அலுவல் மொழி தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் அதன் அடிப்படையில்,

2022 அக்டோபர் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

ஆங்கில மொழி பயன்படுத்துவது உறுதி செய்யப்பட்டுள்ளதற்கும் எதிராக, இப்போது அளிக்கப்பட்டுள்ள பாராளுமன்றக் குழுவின் பரிந்துரைகள் அமைந்திருப்பது கவலைக்குரியதாக இப்பேரவை கருதுகிறது.

பிற்பகல் 12–10

அன்னைத் தமிழ்மொழியைக் காத்திட, ஆங்கிலம் அலுவல் மொழியாக தொடர்ந்திட, ஏன் அரசமைப்புச் சட்டத்தின் 8–வது அட்டவணையில் உள்ள 22 மொழிகளையும் அழியாது காத்திட, இந்தி பேசாத மாநில மக்களின் உரிமைகளை நிலைநாட்டிட தமிழ்நாடு மீண்டும் முன்னோடி மாநிலமாக நின்றிடும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்றக் குழுத் தலைவர் அவர்களால் கடந்த 9–9–2022 அன்று மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ள அறிக்கையில், தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளுக்கும், அம்மொழிகளைப் பேசும் மக்களின் நலனுக்கு எதிராகவும் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஒன்றிய அரசினை இந்தப் பேரவை வலியுறுத்துகிறது." (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையில் இருமொழிக் கொள்கையை நிறைவேற்றிய பேரறிஞர் அண்ணா அவர்களின் அதே உணர்வுடன், இந்தத் தீர்மானத்தைத் தற்போது முன்மொழிந்துள்ளேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு கேட்டு, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலான குழு, இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கின்ற நடவடிக்கை, உயர் கல்வி நிறுவனங்களில் இந்தியைப் புகுத்துகின்ற நிலைமை, கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் இந்தியை முழுமையாகக் கட்டாயப்படுத்துகின்ற நிலைமை ஆகிய அனைத்தும் பல்வேறு மொழிவழி தேசிய இனங்களின் வாழ்வுரிமையை முற்றும் முதலுமாக பறிக்கின்ற ஒரு செயல்.*

[திரு. தி. வேல்முருகன்] [2022 அக்டோபர் 18

இந்திய ஒன்றியம் என்பது, பல்வேறு தேசிய இனங்களைக்கொண்ட, பல்வேறு மொழிவழி மாநிலங்களின் பண்பாடு, கலை, கலாச்சாரம், நாகரிகம், தொன்மை, வாழ்வியல், வரலாறு ஆகியவை அடங்கிய ஒன்று. ஆனால், இந்தித் திணிப்பு இவற்றையெல்லாம் அழித்தொழித்து, ஒற்றை இந்தியா, ஒற்றை உணர்வு. ஒற்றைப் பண்பாடு, ஒற்றைக் கலாச்சாரம், ஒற்றைத் தேர்வு, ஒற்றை மொழி, இந்தி மொழி என்கிற வகையில் அமைந்திருக்கிற இந்தத் திணிப்பை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் வழிநின்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தை இந்திய ஒன்றியத்திற்கு எதிராக, ஏனைய மாநிலங்களின் மொழி வழி மாநில உரிமைகளைக் காக்கின்ற ஓர் அரணாக, முன்னத்தி ஏராக, தமிழக சட்டமன்றத்தில் தமிழக அரசின் சார்பாக அரசினர் தனித் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த அரசினர் தனித் தீர்மானத்தை தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பாகவும், உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழர்களின் சார்பாகவும் நான் மனதார வரவேற்கிறேன்.

இந்தித் திணிப்புக்கு குழுவின் பரிந்துரையை அளித்ததோடு மட்டுமல்லாமல், ஒன்றிய தலைமை அமைச்சர் அவர்கள் மருத்துவக் கல்வி பயிலகத்திற்கான பாடத் திட்டங்களை, நூல்களை இந்தியில் அறிமுகப்படுத்தியிருக்கிறார். அப்படி அறிமுகப்படுத்துகின்றபோது, அகில இந்திய ஒதுக்கீட்டில் இருக்கிற 5,000-க்கும் மேற்பட்ட மருத்துவக் கல்வி இடங்களிலும், பல் மருத்துவக் கல்வி மற்றும் உயர் மருத்துவக் கல்லூரிகளிலும் இந்தியா முழுவதிலும் இருக்கிற ஏனைய மொழிவழி மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் இந்தியைப் படிப்பதற்கு வாய்ப்புகள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதனை அறிவிக்கின்ற அதே நேரத்தில், அகில இந்திய இட ஒதுக்கீட்டில் மொழிவழி மாநில மக்களின், மாணவர்களின் உரிமைகளை நசுக்குகின்றவகையில், இந்தி படிக்கத் தெரியாதவர்கள், மருத்துவக் கல்லூரியில் பயில முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனை ஒன்றிய அரசு கருத்தில்கொள்ளாமல் அந்தப் பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அந்தப் பாடத் திட்டத்திற்கு ஒன்றிய அரசு மாநில மொழிகளில் பாடத் திட்டத்தை உருவாக்கிவிட்டு, இதனைச் செய்திருந்தால்கூட, அனைத்து மாநில மக்களுக்கும், அவரவர் தாய் மொழியில் மருத்துவக் கல்வி பயில்கின்ற உரிமையைத் தந்துவிட்டு செய்திருந்தாலும்கூட, நாம்

2022 அக்டோபர் 18] [திரு. தி. வேல்முருகன்]

ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், அதனைச் செய்யாமல், கட்டாயமாக இந்தியைப் புகுத்துவதற்கும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் ஒன்றிய அரசு முனைந்திருக்கிறது. எல்லா விதத்திலும், இந்தியாவில் இந்தி படிக்கத் தெரிந்தால், இந்தி பேசத் தெரிந்தால் மட்டுமே வாழ முடியும்; இந்தியாவில் இருக்க முடியும் என்கிற ஒரு நிலையை ஒன்றிய தலைமை அமைச்சர் அவர்களின் தலைமையிலான குழு அறிவித்திருப்பது ஏற்கத்தக்கதல்ல. இந்தியா பன்முகத் தன்மைகொண்ட ஒரு தேசம். பல்வேறு மக்கள் வாழ்கிற ஒரு நாடு.

இந்தியாவின் இறையாண்மைக்கும், இந்தியாவின் ஒற்றுமைக்கும், ஊறு விளைவிக்கக்கூடிய ஒன்றிய உள் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற பரிந்துரைகளை தமிழக அரசும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், இந்தச் சட்டமன்றப் பேரவையும் எதிர்த்திருப்பதை நான் வரவேற்கிறேன். அட்டவணை 8-ல் உள்ள 22 மொழிகளையும் தேசிய மொழியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற இந்த அரசினர் தீர்மானத்தை மனதார வரவேற்று வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தனை ஆண்டுகள் கழித்தும்கூட, இந்தித் திணிப்பிற்கு எதிராக நாம் போராட வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறோம். இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லையென்றால், இந்தச் சட்டமன்றப் பேரவையிலும்கூட இந்தியில் பேச வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நாம் தள்ளப்பட்டிருப்போம் என்ற ஐயம்தான் எழுகின்றது. இந்தி படிக்க வேண்டுமென்பதோ அல்லது எந்த மொழியில் படிக்க வேண்டும் என்பதோ பெற்றோர்-மாணவர்களுடைய உரிமை. அதில் தலையிடுவதற்கு யாருக்குமே உரிமை கிடையாது. கல்வியைப் பொதுப் பட்டியலுக்குக் கொண்டு சென்றதே, இந்தித் திணிப்பிற்காக செய்யப்பட்டதுதான் என்பதை ஒன்றிய அரசு நிரூபித்துக்கொண்டிருக்கிறது.

[திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்] [2022 அக்டோபர் 18

இன்றைக்கு மத்தியப் பிரதேச மாநிலத்தில் மருத்துவப் படிப்பினை இந்தியில் படிக்க வேண்டுமென்று அறிமுகப்படுத்தியிருப்பது, நாட்டைப் பிரிக்கின்ற பிரிவினைவாதத்திற்கு முன்னெடுத்திருக்கின்ற முயற்சி. தமிழக மாணவர்கள் தேசிய quota-ல் மத்தியப் பிரதேசத்தில் இருக்கின்ற மருத்துவக் கல்லூரியை எடுக்க முடியுமா? அங்கு சென்றால் இந்தியில் படிக்க வேண்டும். அப்படியென்றால் தமிழகத்தில் இருக்கின்ற மாணவர்கள், இந்தி பேசுகின்ற மாநிலத்தில் NEET-ல் மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும்கூட, அங்கு படிக்க முடியாது என்று சொன்னால், தமிழகத்தில் இத்தனை கட்டமைப்புகளை ஏற்படுத்தி, இவ்வளவு மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். நாம் ஏன் அந்த 15 சதவிகிதத்தை பிற மாநிலங்களுக்குத் தர வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. எனவே, அதைத் தடுக்க வேண்டிய கட்டாயமும் இன்றைக்கு நம்மிடம் இருக்கிறது.

தமிழகத்தின் இருமொழிக் கொள்கைதான் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணம் என்பதை ஏன் ஏற்க மறுக்கிறார்கள்? இவ்வளவு வளர்ச்சிக்குப் பிறகும், இந்த மொழிக் கொள்கைதான் மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறதென்பதை ஏற்க மறுக்கின்றார்கள். அதேபோன்று இன்றைக்கு ஒன்றிய அரசு, தொடர்ந்து முயற்சிகளை செய்துகொண்டிருக்கும்பொழுது, அந்த அரசை நடத்துகின்ற கட்சிகளினுடைய பிரதிநிதிகள், இந்த அவையில் இருப்பவர்கள், ஒன்றிய அரசு இந்தித் திணிப்பை முன்னெடுக்கிறதென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அங்கே இரட்டை நிலைப்பாட்டை எடுக்கக்கூடாது. ஒன்றிய அரசின் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள், இந்த அவையில் இருக்கும்பொழுது, இங்கு நாங்கள் எதிர்க்கிறோம், அங்கு ஆதரிக்கிறோம் என்று திணிப்புக்குத் துணை போகக் கூடாது. அப்படிப்பட்ட ஒரு நிலையை அவர்கள் எடுக்க வேண்டும்.

இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற இந்த முன்னெடுப்பு, இதோடு நிற்கக் கூடாது. இந்தி பேசாத அனைத்து மாநிலங்களையும், ஒற்றுமைப்படுத்த வேண்டிய அவசியம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னெடுக்க வேண்டும். இந்தி பேசாத அனைத்து மாநிலங்களும் ஒற்றுமைப்பட்டாக வேண்டும்; அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்று முன்னெடுக்க வேண்டுமென்று இந்த

2022 அக்டோபர் 18] [திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]

நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதனால் தமிழகத்தில் இந்தித் திணிப்பை எதிர்ப்பது மட்டுமல்ல; இந்திய தேசம் பிரிந்துவிடக் கூடாது; அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை வலியுறுத்தி, ஒன்றிய உள் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசிற்குக் கொடுத்திருக்கிற அந்தப் பரிந்துரைகளை ஏற்கக் கூடாதென்று இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை, முழு மனதோடு கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக நான் வரவேற்கின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

பிற்பகல் 12–20

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களினுடைய உணர்வுகளை மட்டுமல்ல, இந்தி பேசாத கன்னடர்கள், தெலுங்கர்கள், வங்காளர்கள் என்று பல்வேறு மாநில மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடியவகையில், ஒன்றிய உள் துறை அமைச்சர் அவர்கள் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களிடம் சமர்ப்பித்திருக்கின்ற மொழி தொடர்பான 11-வது அறிக்கையை மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் நிராகரிக்க வேண்டும் என்ற அந்தத் தீர்மானத்தை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக நான் வரவேற்கின்றேன். என்றென்றும் மாநில மொழிகளைக் காப்பதில், நிலைநாட்டுவதில், தமிழ்நாடு முன்னிலையில் இருந்திருக்கின்றது. எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழைச் செம்மொழியாக்கக்கூடிய அந்தக் கோரிக்கை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் முன்வைக்கப்பட்டு, டாக்டர் மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், 2004 ஆம் ஆண்டிலே தமிழ் Classical Language-செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. இதற்குப் பிறகுதான் தெலுங்கும், கன்னடமும் 2008 ஆம் ஆண்டிலும், மலையாளம் 2013 ஆம் ஆண்டிலும், அதேபோல ஒடியா மொழி 2014 ஆம் ஆண்டிலும் Classical Language என்ற அந்தஸ்தைப் பெற்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து, முன்னுரையாகப் பேசும்பொழுது, மிக முக்கியமான ஒரு குறிப்பைச் சொன்னார்கள். பெருந்தலைவர்

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2022 அக்டோபர் 18

காமராசர் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் சொன்ன கருத்து, 'ஆங்கிலத்தை எதிர்த்தால், இந்தி அங்கே வந்து அமர்ந்துவிடும்' என்பது. அதுதான் ஒன்றிய அரசாங்கத்தினுடைய திட்டம். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். இன்றைக்கு ஒன்றியத்தை ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற அந்த அரசு, அந்த அரசிற்கு பின்னால் இருக்கக்கூடிய கொள்கைகள், இயக்கங்கள் அனைத்தும் ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒரே தேர்தல் என்ற அடிப்படையில் பேசக்கூடிய இந்தச் சூழ்நிலையில் இந்தி மட்டும்தான் ஒரே மொழி என்றால், இந்தியா வளர்ச்சியின் பாதைக்குச் செல்லாது என்பதுதான், யதார்த்தமான உண்மையாக இருக்கின்றது.

இன்றைக்கு இந்தியர்கள், மேலை நாடுகளுக்கும் கொரியா, ஜப்பான், தாய்லாந்து, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கும் பணிக்குச் செல்கின்றார்கள், அங்கு வர்த்தகம் செய்கின்றார்கள் என்றால், அதற்கு ஆங்கிலம் காரணம் மட்டுமல்ல, பல்வேறு தேர்வுகள் TOEFL, IELTS, TOEIC, GRE போன்ற தேர்வுகள் அனைத்தும் ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன. இந்தி மட்டும்தான் என்றால், எப்படி நாம் சர்வதேச அளவில் தொடர்புகொள்ள முடியும். எனக்கு முன்னர் உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியினுடைய தலைவர் அன்பு சகோதரர் திரு. ஈஸ்வரன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினைக்கு மற்ற மாநிலங்களையும் ஒருங்கிணைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு அந்த நிலைதான் இந்தியாவில் இருக்கின்றது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒன்றிய உள் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு குடியரசுத் தலைவரிடம் இந்த அறிக்கைளை அளித்த பிறகு, அதற்கு எதிராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவான ஓர் அறிக்கையை வெளியிட்ட பிறகு, கர்நாடகத்தில், ஆந்திராவில் மட்டுமல்ல, வங்காளத்தில் Bangla Pokkho என்ற ஓர் அமைப்பு கொல்கத்தாவில் பேரறிஞர் அண்ணாவின் படத்தையும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய படத்தையும் சுமந்துகொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) 'இந்தியை எதிர்ப்போம், இந்தியை ஒழிப்போம்' என்று இந்திக்கு எதிராக, இந்தி ஆதிக்கம் தவறு என்று அவர்கள் மிகப்

2022 அக்டோபர் 18] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

பெரிய ஒரு போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். Bangla Pokkho என்ற அமைப்பினுடைய பொதுச் செயலாளர், அவருடைய பெயர் Garga Chatterjee. அவர்களிடம் நிருபர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த பேரறிஞர் அண்ணா, கலைஞர் இவர்களுடைய படங்களை வைத்து நீங்கள் ஏன் போராட்டத்தை நடத்துகின்றீர்கள் என்று கேட்டபோது அவர் "In 1965, Tamil Nadu, under Anna and Muthamizharignar Kalaignar showed that Hindi imperialism can be defeated. (Thumping of desks) This served as an inspiration even for us. So, it is natural we would carry the pictures of our great non-Hindi statesmen" என்று சொல்லியிருக்கின்றார். "பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் இந்தி ஆதிக்கத்தை ஒழிக்க முடியும், அதை தோற்கடிக்க முடியும் என்பதற்கு எங்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கின்றார்கள். எனவேதான், இந்தி பேசாத அந்த மிகப் பெரிய statesmen, மிகப் பெரிய அறிஞர்களுடைய படங்களை நாங்கள் சுமந்திருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

பிற்பகல் 12-25

இன்னொன்றையும் நான் குறிப்பிட வேண்டும். ஒரு பதாகையை Bangla Pokkho அமைப்பினர் ஏந்தியிருந்தார்கள். அந்தப் பதாகையில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய படம் இருந்தது. அந்தப் பதாகையிலிருந்த வாசகம், 'உலகத்தோடு உரையாட ஆங்கிலம் இருக்கிறது. அப்படியானால் இந்தியாவிற்குள் உரையாட தமிழர்கள் இந்தியை ஏன் கற்க வேண்டும்? பெரிய நாய் செல்ல பெரிய கதவும், சிறிய நாய் செல்ல சிறிய கதவும் தேவையா? நான் சொல்கின்றேன், பெரிய கதவின் வழியே சிறிய நாயும் செல்லட்டும்' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வாசகத்தை தாங்கி அந்தப் போராட்டம் நடைபெற்றது. மிகச் சிறப்பான தீர்மானம். அரசமைப்புச் சட்டத்தை மதிப்பதாக சொல்லக்கூடிய ஒன்றிய அரசு, அரசமைப்புச் சட்டத்தினுடைய பல்வேறு விழுமியங்களையெல்லாம் ஒவ்வொன்றாக நசுக்கக்கூடிய காரியத்தைச் செய்து வருகிறது. அதில் இதுவும் ஒன்று. இதை எதிர்க்க வேண்டும். ஆங்கிலமும், தமிழும், ஆங்கிலமும், பிராந்திய மொழிகளும்தான் இணைப்பு மொழிகளாக இருக்க வேண்டுமென்பதை உறுதியாக நாம் நிலைநாட்ட வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே, நிச்சயமாக தமிழ்நாடு இந்தியாவிற்கே சிறந்த வழிகாட்டியாக விளங்கும். பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழஞர் கலைஞரும் இந்தி

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2022 அக்டோபர் 18 imperialism–ஐ, இந்தி ஏகாதிபத்தியத்தை, இந்தி சர்வாதிகாரத்தை ஒழித்ததுபோல, முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய வழியில், நம்முடைய தளபதியார் அவர்கள் தலைமையிலே, 'இந்தி சர்வாதிகாரத்தை, இந்தி ஏகாதிபத்தியத்தை ஒழிப்போம்' என்று உறுதி எடுத்துக்கொள்வோம் என்று சொல்லி, தீர்மானத்தை ஆதரித்து விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தி மொழி பேசாதவர்கள் அனுமதிக்கும்வரை இந்தியை ஒருபோதும் ஆட்சி மொழி ஆக்கமாட்டோம் என்ற உறுதிமொழியையும் மீறி, இன்று இந்தித் திணிப்பை கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே கொண்டுவரத் துடிக்கின்றார்கள், ஒன்றிய அரசினுடைய தலைமைப் பொறுப்பில் இருக்கிறவர்கள். அதை எதிர்த்து, நம்முடைய சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம், வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் ஆகும். அந்தத் தீர்மானத்தை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பில் நான் வரவேற்கின்றேன். நம்முடைய பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், நம்முடைய முதல்வர் போன்றவர்கள் இந்தியை நுழையவிடக் கூடாது. இந்தியால் நம் தமிழ், தமிழர் உணர்வு, தமிழ் மக்களினுடைய வாழ்வு பாதிக்கப்படக் கூடாது என்பதில் அக்கறை செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நம் நாட்டிற்கே ஒரு முன்மாதிரி உணர்வுகளை ஊட்டிக் கொண்டிருக்கின்றது தமிழகம். அந்த வகையிலே, Unity in diversity என்று சொல்லப்படுகின்ற இந்த நாட்டில், பல்வேறு மாநிலங்கள், பல்வேறு மொழிகள், பல்வேறு இனங்கள், பல்வேறு கலாச்சாரங்கள் இவை அனைத்தும் இருக்கின்ற இந்த நாட்டில் ஒரு குறிப்பிட்ட மொழி, இந்தி மொழிதான் எல்லாமுமாக, ஆட்சியிலும், அதிகாரத்திலும், இருக்க வேண்டுமென்று கொண்டுவருவதை நாம் ஒருக்காலும் அனுமதிக்கக் கூடாது என்பதற்காக நம்முடைய மன்றத்தில், மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் மீண்டும் ஒருமுறை வரவேற்று, வணங்கி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

2022 அக்டோபர் 18]

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் துறை அமைச்சகத்தின் அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்றக் குழுத் தலைவராகவும் உள்ள மாண்புமிகு அமித்ஷா அவர்களின் தலைமையிலான குழு சமீபத்தில் மாண்புமிகு குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை அளித்திருப்பது நாடு முழுவதும், இன்றைக்கு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. ஏற்கெனவே ஒன்றிய அரசு ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே வரி என்று மாநில உரிமைகளைப் பறித்து வருகின்ற இந்த வேளையில், இன்றைக்கு RSS, Vishwa Hindu Parishad, Sangh Parivar அமைப்பினுடைய கொள்கைகளை நிறைவேற்றும் வகையில் ஒன்றிய அரசினுடைய கல்வி நிறுவனங்களான I.I.T, I.I.M, AIIMS, Kendriya Vidyalaya பள்ளிகளில் பயிற்று மொழியாக இந்தி மொழியைத் திணிப்பதற்கான பரிந்துரைகளை அந்தக் குழு அளித்திருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், இன்றைக்கு இந்திய நாட்டினுடைய இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளிலும், நேர்முகத் தேர்வுகளிலும் ஆங்கிலத்திற்குப் பதிலாக, இந்தியை அந்தக் குழு பரிந்துரைத்திருக்கிறது.

பிற்பகல் 12–30

இந்தியா என்பது பன்முகத் தன்மை கொண்ட ஒரு நாடு; மாநில உரிமைகள் மட்டுமல்ல; கூட்டாட்சித் தத்துவத்திற்கும்; இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கும் எதிராக ஒன்றிய அரசு தொடர்ந்து இன்றைக்கு இந்தி மொழியைத் திணித்து வருகின்ற இந்த வேளையில், இந்தியா என்பது பன்மொழி கூட்டமைப்பு என்ற தேசத்தின் ஒரு தேன்கூடு; அந்தத் தேன்கூட்டின்மீது இந்தி என்ற கல்லை ஒன்றிய அரசு எறிந்து கொண்டிருக்கின்றது. அதற்கான விளைவுகளை நிச்சயமாக ஒன்றிய அரசு சந்திக்க நேரிடுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் ஒரு பகுதியாகத்தான் இன்றைக்கு நாடு முழுவதும், இந்தி எதிர்ப்பிற்கு எதிராக தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரம் மற்றும் வங்காளத்திலும் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

இந்த அறிவிப்பு வந்தவுடனேயே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் அட்டவணை 8–ல் உள்ள தமிழ் மொழி உள்ளிட்ட 22 பிராந்திய மொழிகளுக்கு சமமாக கல்வி மற்றும் வேலைவாய்ப்பிலே உரிமை வழங்க வேண்டுமென்று கடிதம் எழுதியுள்ளார். மொழியானாலும் சரி, மாநில உரிமைகளானாலும்

[திரு. ட்டி. இராமச்சந்திரன்] [2022 அக்டோபர் 18 சரி, அதனை நிலைநாட்டுவதில், இந்தியாவிலேயே தலைசிறந்த முதல்வராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளங்குகிறார் என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்றைக்கு இந்தித் திணிப்புக்கு எதிராகவும், தமிழ் மொழி உள்ளிட்ட 22 பிராந்திய மொழிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த அரசினர் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தி மற்றும் சமஸ்கிருதம் திணிப்பிற்கு வகைசெய்யும் முறையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் அனைத்துப் படிப்புகளுக்கும் பொது நுழைவுத் தேர்வு நடத்தப்படும் என ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. மத்திய அரசின் கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் இந்தி மட்டுமே பயிற்று மொழியாக இருக்குமென்றும், ஆங்கிலம் விருப்ப மொழியாக மட்டுமே இருக்குமென்றும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தி மொழி பேசாத மாநில மாணவர்களை, மத்திய கல்வி நிலையங்களிலிருந்து வெளியே தள்ளும் முயற்சியாகவே இது உள்ளது. ஒன்றிய அரசின் இதுபோன்ற நடவடிக்கைகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும், அரசியல் சாசனத்தின் 8-வது அட்டவணையில் இடம்பெற்றுள்ள நமது தமிழ் மொழி உள்ளிட்ட 22 இந்திய மொழிகளையும் ஒன்றிய அரசின் அலுவல் மொழியாக அறிவிக்க வேண்டுமென்றும், மருத்துவக் கல்வி உள்ளிட்ட அனைத்துப் படிப்புகளுக்கும் பொது நுழைவுத் தேர்வை இரத்து செய்திட வேண்டுமெனவும், ஒன்றிய அரசின் தேர்வாணையத்தின் கேள்வித் தாள்களில் மாநில மொழிகளும் இடம் பெற வேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கோருகிறோம்.

இந்த நிலையில் அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்றக் குழுத் தலைவர் அவர்களால் கடந்த 9-9-2022 அன்று மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தமிழ் மொழி உள்ளிட்ட மாநில மொழிகளுக்கும், அம்மொழிகளைப் பேசும் மக்களின் நலனிற்கு எதிராகவும் வழங்கப்பட்டிருக்கும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக்

2022 அக்டோபர் 18] [திரு. வி.பி. நாகைமாலி]

கூடாது என ஒன்றிய அரசினைக் கோரும் வகையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிற இந்தித் திணிப்பிற்கு எதிரான தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனதார ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

பிற்பகல் 12–35

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாடு மாபெரும் இராணுவத்தைக் கொண்டிருக்கிறது. உலகத்தின் மிகப் பெரிய 7–வது இராணுவத்தை கொண்டுள்ளது எனச் சொல்லப்படுகிறது. அந்த இராணுவத்தால், இந்தியாவின் ஒற்றுமை பாதுகாக்கப்படுகிறது என்பதைவிட அரசியல் சாசனம் உறுதிப்படுத்தியிருக்கிற, பன்மைத் தன்மை பாதுகாக்கப்படும் என்கிற நம்பிக்கையால்தான் இந்திய நாட்டின் ஒற்றுமை பாதுகாக்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்தியாவின் ஆகப்பெரும் கருத்தியல் போக்கில் சமரசம் இல்லாத ஒரு மகத்தான இயக்கமாக இயங்கிக்கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைப் பொறுப்பினை நம்முடைய தளபதி அவர்கள் ஏற்ற ஒரு வார காலத்திற்குள்ளாக உள் துறை அமைச்சருடைய இந்த அறிவிப்பு, இந்தியாவில் மிகப் பெரிய தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது. ஏனென்றால் இது வெறும் மொழி தொடர்பான ஒரு நடவடிக்கை அல்ல; அதிகாரம் தொடர்பானது; நம்முடைய வாழ்வியல் தொடர்பானது; நம்முடைய இனத்தின் அடையாளம் தொடர்பானது; இந்தியாவின் பன்மைத் தன்மை தொடர்பானது; மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழகாக குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, இந்திய ஒற்றுமை என்கிற அந்தச் சுடர் அணைந்துவிடக் கூடாது என்கிற ஆதங்கம் தொடர்பானது. அறிவிப்பு தகவல்கள் 13 ஆம் தேதி வந்தபொழுது யார் நம்மைக் காப்பாற்றுவார்கள் என்று எல்லோரும் கலங்கி நிற்கின்ற நேரத்தில், 24 மணிநேர இடைவெளியிலே தமிழ்நாடு முழுவதிலும் இளைஞரணிக்கு உத்தரவிட்டு, இந்தித் திணிப்பிற்கு எதிராக ஒரு மாபெரும் எதிர்ப்பை பதிவு செய்யக்கூடிய கடமையை திராவிட முன்னேற்றக் கழகம் செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தருணத்தில், கட்சிகளைத் தாண்டி அது தமிழகத்தின் தாகத்தைத் தணித்திருக்கிறது. அறிஞர் அண்ணா இல்லையே! முத்தமிழறிஞர் கலைஞர் இல்லையே! என்கிற அந்தத்

[திரு. ம. சிந்தனை செல்வன்] [2022 அக்டோபர் 18

தவிப்பையெல்லாம் தாண்டி, அந்த இரு பெரும் ஆளுமைகளின் அடையாளமாக, 'இதோ நான் இருக்கிறேன்' என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் நமக்கு ஊட்டிய நம்பிக்கையை அது வெளிப்படுத்தியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த அடிப்படையில் இந்திய நாட்டின் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும், அந்த ஒற்றுமைச் சுடர் பாதுகாக்கப்பட வேண்டும்.

எனக்கு முன்னால் உரையாற்றிய அனைத்து சான்றோர் பெருமக்களும் பல்வேறு தன்மைகளில் அதை விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். நானும் ஒன்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மதத்தின் அடிப்படையிலே சிறுபான்மை, பெரும்பான்மை என்று ஓர் உரையாடலைக் கட்டமைத்து, அது மதத்தைச் சார்ந்தவர்களுடைய நன்மைக்காகவோ, மதத்தில் இருக்கக்கூடிய மதிப்பீடுகளை, விழுமியங்களைக் கொண்டு செல்வதற்கான அந்த முயற்சியிலோ அல்ல; மதத்தின் மூலமாக ஓர் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஓர் உரையாடலாக, மத வழி பெரும்பான்மை, மத வழி சிறுபான்மை என்கிற அரசியலைக் கட்டமைத்ததுபோலவே, இவர்கள் மொழி வழி பெரும்பான்மை, மொழி வழி சிறுபான்மை என்கிற அரசியலையும் கட்டமைக்க முயற்சிக்கிறார்கள். எல்லாவிதமான மதிப்பீடுகளுக்கும் எதிராக இவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள்.

மதுரையில் AIIMS மருத்துவமனை வருகிறது என்று நாம் மகிழ்ச்சியடைகிறோம். தமிழ்ச் சங்கம் உருவானதாகச் சொல்லப்படுகின்ற மதுரையில், AIIMS மூலமாக இந்திதான் வரும் என்று சொன்னால், நாம் எங்கே போய் நிற்பது? தமிழ்நாட்டை யார் பாதுகாப்பது என்கிற கேள்விக்கு பதிலளிக்கக்கூடிய வகையிலே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் குரலை இன்று நான் எண்ணிப் பார்க்கிறேன். மொழிப் போருக்கான அந்தக் களம் இன்னும் உலர்ந்து போகவில்லை என்கிற ஒரு வார்த்தையை அவர் பயன்படுத்தியதை நான் எண்ணிப் பார்க்கிறேன். குருதி தோய்ந்த அந்தக் களம் இன்னும் உலர்ந்து போகவில்லை; இன்னும் அது ஈரமாகவே இருக்கிறது என்று அவர்கள் சொன்னதைப்போல, அதற்கான தேவை இருக்கிறது. ஆனால், தமிழக அரசின் இந்தத் தீர்மானத்தை ஏற்று ஒன்றிய அரசு தன்னுடைய முடிவை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலும், நாடாளுமன்றத்திலும் இதைத் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்கின்ற எழுச்சித் தமிழர் மரியாதைக்குரிய

2022 அக்டோபர் 18] [திரு. ம. சிந்தனை செல்வன்]

தலைவர், முனைவர் திருமாவளவன் அவர்கள் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசை கொள்கை வழியிலே நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தைப் பாதுகாக்க, இந்தியாவின் பன்மைத் தன்மையைப் பாதுகாக்க, அரசமைப்பு சாசனத்தைப் பாதுகாக்க எடுக்கின்ற எல்லா முயற்சிகளிலும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் 100 விழுக்காடு உடனிருக்கிற ஒத்துழைப்பு இருக்கும் என்பதைப் பதிவு செய்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தமிழிலேயே பேசுங்கள். (சிரிப்பு) வார்த்தை வர வேண்டுமல்லவா!

திரு. நயினார் நாகேந்திரன்: 'தாய்க்கொரு பழி நேர்ந்தால் மகற்கில்லையோ? அன்னைத் தமிழுக்கு ஒரு பழி நேர்ந்தால் நம் அனைவருக்கும்தான்.' (மேசையைத் தட்டும் ஒலி) இதில் யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. நிச்சயமாக இந்தித் திணிப்பு இருக்கும் என்று சொன்னால், தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சி உண்மையாக அதைக் கண்டிக்கும். இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. மாண்புமிகு பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் ஐ.நா. சபைக்குச் சென்றாலும் சரி, அயோத்திக்குச் சென்றாலும் சரி, அங்கே திருக்குறளையும் பேசுவார்; தமிழ் வளர்த்த நமது புலவர்களைப் பற்றியும் பேசுவார். Banaras Hindu University-ல் தமிழுக்காக ஒரு தனி இருக்கையையே வாங்கித் தந்தவர் நம்முடைய மாண்புமிகு பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள். அதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை.

பிற்பகல் 12–40

அதேநேரத்தில் நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தின்மீது பேசுகின்றபோது, 'C' பிரிவு மாநிலங்களில் அதாவது, இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி திணிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கும் அந்தச் செய்தி உண்மையிலேயே எந்த விதம் என்பது எனக்குத்

[திரு. நயினார் நாகேந்திரன்] [2022 அக்டோபர் 18

தெரியவில்லை. ஆக, 9-9-2022 அன்று கொடுக்கப்பட்ட இந்தப் பரிந்துரையில், 'C' பிரிவு மாநிலங்களில் நிச்சயமாக தாய்மொழி கட்டாயம் இருக்க வேண்டுமென்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. தாய்மொழிக் கல்வி—அனைத்திலும், தமிழகத்தில்—நிச்சயமாக அந்தந்த மாநிலங்களில், இந்தி பேசாத மாநிலங்களில் நிச்சயமாக, கட்டாயமாக தாய்மொழி கல்வி இருக்க வேண்டுமென்று அதில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், 2 தினங்களுக்கு முன்பாக, எல்லா மாநில சட்டங்களும் அந்தந்த தாய்மொழியில் இருக்க வேண்டும். எல்லா நீதிமன்றத் தீர்ப்புகளும் தாய்மொழியில் இருக்க வேண்டுமென்று பேசியிருக்கிறார். இந்த வகையில் நமது தாய்மொழி தமிழுக்கு எந்தவிதத்தில் இழுக்கு வருமென்று என்னால் நம்ப முடியுமென்று தெரியவில்லை. இருந்தாலும், அதில் நிச்சயமாக தாய்மொழி கட்டாயம் இருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில், அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. இன்றைக்கு மாண்புமிகு உள் துறை அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார். அதுகுறித்து பல்வேறு கருத்துகள் இங்கே சொல்லப்பட்டன. இங்கே படிக்கின்ற மருத்துவக் கல்லூரி மாணவர் உத்தரப் பிரதேச மாநிலத்திற்குச் சென்று, அங்கே மருத்துவக் கல்லூரியில் இந்தியில் படிப்பதா என்ற கேள்வி எழுந்திருக்கிறது. நிச்சயமாக, ஆங்கிலம் படிப்பதற்கு அதில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதாவது இந்தியைத் தவிர, இந்தி தெரியாதவர்கள், அங்கே ஆங்கிலம் படித்துக்கொள்ளலாம் என்கின்ற ஓர் உறுதிமொழியும் இருக்கிறது. ஆக, அந்த வகையில் இதையெல்லாம் வைத்து பார்க்கும்போது நிச்சயமாக, தாய்மொழி தமிழுக்கு எந்தவிதமான பாதிப்பும் வராது என்று மத்திய அரசின் சார்பில் நான் சொல்லிக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை என்னால் ஏற்க இயலாது என்று சொல்லி, நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையும் கேட்டுவிட்டு போங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், கேட்டுவிட்டுப் போங்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார்

2022 அக்டோபர் 18] [திரு. தங்கம் தென்னரசு]

நாகேந்திரன் அவர்கள் பேசுகிறபோது, தாய்மொழியில்தான் தொடரும் என்று சொல்கிறார். நான் அவரிடத்தில் கேட்கிறேன், அவர் சார்ந்திருக்கக்கூடிய இயக்கத்தைக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Lobby-ல் இருந்தாலும், கேட்டுவிட்டுப் போங்கள். அவர் என்ன பேசுகிறார் என்பதை உட்கார்ந்து கேட்டுவிட்டுப் போங்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: தாய்மொழியில் நடைபெறும் என்று சொன்னால், Kendriya Vidyalaya பள்ளிகள் இருக்கின்றன, I.I.T. இருக்கிறது. எல்லா இடங்களிலும் நாங்கள் இன்றிலிருந்தே தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு வருவோம் என்கிற சட்டத்தைக் கொண்டு வருவதற்கு பா.ஜ.க. அரசு தயாராக இருக்கிறதா என்பதை நான் அவர்களுக்குக் கேள்வியாக வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களிடத்தில் அது இருக்கிறது. அதைச் செய்வதற்கு அவர்கள் முன்வரவில்லை. எனவே, இந்தக் கேள்வி வருமென்றுதான் அவர்கள் இன்றைக்கு கிளம்பி வெளியே போயிருக்கிறார்கள். எனவே, இங்கே தாய்மொழியைக் கொண்டு வருவதை விட்டுவிட்டு, இங்கே தமிழ்மொழிக்கு பாதுகாப்பை செய்வதை விட்டுவிட்டு, நீங்கள் ஐ.நா.-ல், திருக்குறளைச் சொல்கிறோம். ஐ.நா.-ல் தமிழ் பேசுகிறோம் என்று சொல்வது, படிக்கிறது இராமாயணமாக இருக்கிறது; இடிக்கிறது பெருமாள் கோயிலாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அழகாகச் சொன்னீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த அரசினர் தனித் தீர்மானத்தின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். மொழிதான் மனிதனின் அடையாளம். ஓர் இனம் என்பது மொழியின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. இந்தியத் திருநாடு, பல்வேறு மொழிகளின் அடிப்படையில், இனங்களின் அடிப்படையில், கலாச்சாரத்தின் அடிப்படையில் பல்வேறு கோணங்களில் பிரிக்கப்பட்டு, வேற்றுமையில் ஒற்றுமை என்ற பன்முகத் தன்மை கொண்டது. அந்த பன்முகத் தன்மை கொண்ட இந்தியத் திருநாடுதான், உலக அரங்கில் சிறந்த ஜனநாயக நாடாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு, தமிழ்மொழிக்கு என்று தனிச் சிறப்பு உண்டு.

[திரு. ஜி.கே. மணி] [2022 அக்டோபர் 18

'தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே'

என்றெல்லாம் தமிழ்மொழிக்கு தனிச் சிறப்பு உண்டு. தமிழுக்கு ஓர் இன்னல் என்று சொன்னால், உயிர் கொடுப்பேன் என்ற வரலாறு தமிழ்நாட்டிற்கும், தமிழ் இனத்திற்கும் உண்டு என்பதை நாம் மறந்துவிட முடியாது. இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிற பல காரணங்கள், எதிர்காலத்தில் தமிழர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும், இந்தியத் திருநாட்டில் இருக்கிற எல்லா மாநில மொழிகளுக்கும் ஏற்படக்கூடிய சோதனையாகவே நாம் பார்க்க முடிகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்று தமிழ் வேண்டாம் என்று சொல்கிற நிலை உருவாகும் என்று சொன்னால், குறிப்பாக தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியாவில் இருக்கிற பல மாநில மொழிகளுக்கு மிகப் பெரிய சோதனையும், பாதிப்பும் ஏற்படும் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

பிற்பகல் 12–45

குறிப்பாக, அரசமைப்புச் சட்டத்தின் 8–வது அட்டவணையில் தற்போது 22 மொழிகள் இருக்கின்றன. 8–வது அட்டவணையில் இருக்கிற 22 மொழிகளுக்கும், அலுவல் மொழி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்; ஆட்சி மொழி அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதேபோன்று, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசினர் தனித் தீர்மானத்தில் சொல்லியிருப்பதைப்போல, மத்திய அரசின் கல்வி நிறுவனங்களான IIT, IIM, AIIMS மற்றும் Kendriya Vidyalaya போன்ற கல்வி நிறுவனங்களில் தமிழ்மொழி புறக்கணிக்கப்படும். அவ்வாறு அந்தந்த மாநில மொழிகள் புறக்கணிக்கப்படுமானால், ஒவ்வொரு மாநிலத்திலும் வாழக்கூடியவர்களின் நிலை, தமிழ்நாட்டில் வாழக்கூடியவர்களின் நிலை எதிர்காலத்தில் என்னவாகும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கடந்த காலங்களில், அதிலும் குறிப்பாக சமீப காலங்களில் மத்திய அரசால் நடத்தப்பெறும் போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி

2022 அக்டோபர் 18] [திரு. ஜி.கே. மணி]

பெற்ற இந்தி பேசக்கூடியவர்கள், குறிப்பாக, தொடர்வண்டி நிலையங்கள், சின்னச் சின்ன இரயில்வே நிலையங்களில் எல்லா பணிகளிலும் பணியாற்றுகிறார்கள். கிராமப்புறத்தில் இருக்கக்கூடியவர்கள் அந்த இரயில் நிலையங்களுக்குச் சென்றால், அவர்கள் பேசுவது ஒன்றும் இவர்களுக்குப் புரிவதில்லை. தமிழ்நாட்டிலிருக்கும் சாதாரண ஏழை, எளிய, படிக்காத மக்கள் எங்கே செல்வது, எந்த ஊருக்குச் செல்வது என்று அவர்களிடம் சென்று கேட்டால் அவர்கள் பேசுவதை இவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இன்றைக்கே இந்த நிலைமை என்றால், எதிர்காலத்தில் என்ன நிலைமை உருவாகும் என்பதை நாம் எண்ணிப் பார்க்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

மொழி என்பது ஊனோடு, உயிரோடு கலந்திருக்கிற ஒன்று. ஒன்றைச் சொல்கிறேன், இன்று ஒரு மனிதன் பல்வேறு மொழிகளில் புலமை பெற்றவனாக இருக்கலாம். அதாவது, 10 மொழிகளில் புலமை பெற்றவனாக இருந்தாலும்கூட, இரவில் தூங்கிக் கொண்டிருக்கும்போது, நடுநிசியில் ஒருவன் ** திடீரென்று அவன் அலறுவதுகூட தாய்மொழியிலேதான். ஆகவே, தாய்மொழிக்கென்று ஒரு தனிச் சிறப்பு இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த இரண்டு வார்த்தைகளும் வேண்டாமே. ** அவைக் குறிப்பில் வேண்டாமே.

திரு. ஜி.கே. மணி: இல்லை, ஊசியால் குத்துகிறான் அல்லது கனவு காண்கிறான். கனவு காணுகிற நேரத்தில், அவன் உளறுவதுகூட தாய்மொழியிலேதான். ஆகவே, தாய்மொழிக்கென்று ஒரு தனிச் சிறப்பு உண்டு. தாய்மொழிக்கு ஒரு சோதனை என்று வந்தால், எக்காரணம் கொண்டும் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய கடமை நமக்கு உண்டு என்பதை நாம் மறந்துவிடவும் முடியாது. அதேநேரத்தில், தமிழ், கட்டாய மொழி. இந்தி, இணைப்பு மொழி–தொடர்பு மொழியாக இருக்கிறது. தேவையானால், விருப்பப்படக்கூடியவர்கள் மூன்றாவது மொழியாக இந்தி மொழியையோ, பிரெஞ்சு மொழியையோ, உருது மொழியையோ, விருப்பப்பட்டதைப் படித்துக்கொள்ளலாம். அதற்கு அரசு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஜி.கே. மணி] [2022 அக்டோபர் 18

தடையாக இல்லை. அதைவிடுத்துவிட்டு, இந்தித் திணிப்பு கூடாது என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய ஆணித்தரமான கருத்து என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நெஞ்சார வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த அரசினர் தனித் தீர்மானத்தை எங்கள் காங்கிரஸ் பேரியக்கம் உளமார ஆதரிக்கிறது, வரவேற்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தத் தீர்மானத்தை படிக்கும்போது, அரை நூற்றாண்டிற்கு முன்பு, நான் மாணவனாக இருந்தபோது படித்தது நினைவுக்கு வந்தது.

ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள்!
நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இதுவல்லவே!

என்ற வாசகம். அதனுடைய மறு வாசிப்பாக, மறு பதிப்பாக இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தாய்மொழியை, தமிழ் மொழியைக் காப்பதற்காக இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மத்திய உள் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பிரதமர் அவர்களும் பாரதியாரைப் பற்றிப் பேசுகிறார்கள், திருக்குறளைப் பற்றிப் பேசுகிறார்கள். வெளிநாடுகளில் போய் பேசுகிறார்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதையெல்லாம் புரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழினத்தை ஒழிப்பதற்கும், அழிப்பதற்கும் ஒரு கட்சி இந்த நாட்டிலே இருக்கிறதென்றால், அது பாரதிய ஜனதா கட்சிதான். அவர்களோடு ஒத்துப்போவதற்கும் சில கட்சிகள் இங்கே இருக்கின்றன. அவர்கள் என்ன விரும்புகிறார்கள் என்றால், தமிழினத்தை காவு கொடுக்க வேண்டும், தமிழினத்திற்கு எதிரான செயல்களில் யார் ஈடுபட்டாலும், நாங்கள் அவர்களுக்குத் துணை நிற்போம் என்று சில கட்சிகளும், இயக்கங்களும் இங்கு இருக்கின்றன.

2022 அக்டோபர் 18] [திரு. கு. செல்வபெருந்தகை]

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த பாராளுமன்றத் தேர்தலிலே தேனியில் ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்போது சொன்னார். தமிழ் மொழியை எப்படியெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் பாதுகாத்தது; எப்படியெல்லாம் இந்த மொழியைப் பாதுகாப்பதில் சிரமப்பட்டது என்பதைப் பற்றிப் பேசினார்கள். எங்களுடைய மேனாள் காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தலைவர் திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுடைய தந்தை திரு. ஈ.வி.கே.எஸ். சம்பத் அவர்களைப் பற்றி நினைவு கூர்ந்தார். ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு அப்போதிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு. தர்மலிங்கம் அவர்களும், திரு. ஈ.வி.கே.எஸ். சம்பத் அவர்களும் 'எங்களுடைய தலைவர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை அறிவித்திருக்கிறார். நீங்கள் உடனே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும்' என்று ஒரு கடிதம் எழுதுகிறார்கள். நேரு அவர்கள், ஒருவாரம் காலதாமதமாக அந்தக் கடிதத்திற்கு பதில் எழுதுகிறார். அந்தக் கடித நகல் தேதி உட்பட என்னுடைய கையில் இருக்கிறது. "அன்புள்ள ஸ்ரீசம்பத் அவர்களே, உங்களுடைய கடிதமும், தந்தியும் கிடைக்கப் பெற்றேன். உங்கள் தலைவரிடம் சொல்லுங்கள். உங்கள் கடிதத்திற்குப் பதில் எழுத ஏற்பட்ட காலதாமதத்திற்கு வருந்துகிறேன்" என்று எழுதுகிறார். இதுதான் ஜவஹர்லால் நேரு அவர்களுடைய பாரம்பரியம், தலைமைப் பண்பு. தான் கடிதம் தாமதமாக எழுதுவதற்கே வருத்தம் தெரிவிக்கிறார் முன்னாள் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசுக்கு எத்தனை கடிதங்கள் எழுதியிருப்பார். ஏதாவது பதில் வந்திருக்கிறதா இதுவரைக்கும். அதுதான் அந்தப் பாரம்பரியத்திற்கும், இந்தப் பாரம்பரியத்திற்கும் உள்ள இடைவெளி என்பதை நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல; "நீங்கள் எழுதிய கடிதத்தை நான் உன்னிப்பாகப் படித்தேன். ஆங்கிலத்தைப் பற்றியும், இந்தியைப் பற்றியும் நான் கொடுத்துள்ள உறுதிமொழிகளை எந்தவிதத்திலும் பின்வாங்க மாட்டேன். ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக நீங்கள் விரும்புகின்ற மொழி இருக்கும். அந்தந்த மாநிலங்கள் எந்தெந்த மொழிகளை விரும்புகிறார்களோ, அந்த அடிப்படையிலே, அந்த மொழிகளை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். மத்திய அரசுடன் எந்த ஒரு மாநில அரசும் கடிதப் போக்குவரத்தில் ஆங்கிலத்தைப்

[திரு. கு. செல்வபெருந்தகை] [2022 அக்டோபர் 18 பயன்படுத்தலாம் அல்லது மாநிலங்களுக்கிடையே கடிதப் போக்குவரத்தை ஆங்கிலம் அல்லது தங்களுடைய தாய்மொழியில் பயன்படுத்திக்கொள்ளலாம்" என்று ஜவஹர்லால் நேரு அவர்கள் உத்தரவாதம் கொடுக்கிறார். ஜவஹர்லால் நேருவுக்குப் பிறகு, லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் பாரதப் பிரதமராக வருகிறார். அவர் 11–2–1965 அன்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது இதே திராவிட முன்னேற்றக் கழக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களுக்குச் சொல்கிறார்; "இது பண்டிட் நேருவின் உறுதிமொழி வாசகங்கள். இவற்றையே இந்த அரசும் பின்பற்றும். லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் சொன்ன வார்த்தைகள், பண்டித நேருவின் கருத்தை அவருடைய மறைவிற்குப் பிறகு, பிரதமராக இருக்கும் நான் இதை வலியுறுத்துவேன்; கடைபிடிப்பேன்" என்று சொல்கிறார். "பண்டிட்ஜியால் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளை எந்தவித வரையறைகளும், வாசக மறைப்புகளுமின்றி பரிபூரணமாக நாங்கள் நடைமுறைப்படுத்துவோம் என்று சொல்கிறார். அதற்குப் பிறகு, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இருந்தபோது, பண்டிட்ஜியாலும், சாஸ்திரிஜியாலும் கொண்டு வரப்பட்ட உறுதிமொழிகளுக்கு சட்ட வடிவு கொடுக்க உள் நாட்டு அமைச்சர் திரு. ஒய்.பி. சவான் அவர்கள் 16–12–1967–ல் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துகிறார்; "திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த தீர்மானம், கடிதப் போக்குவரத்து இன்னும் நீர்த்துப் போகவில்லை. இது தொடரும்; காங்கிரஸ் பேரியக்க ஆட்சி அதற்கு உறுதுணையாக இருக்கும்" என்று சொல்கிறார். ஆனால், இப்போது என்ன சொல்லிவிட்டுப் போகிறார், பா.ஜ.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் நாங்கள் எல்லாம் உறுதுணையாக இருப்போம். ஆனால், மத்தியப் பிரதேசத்தில் மருத்துவம் படிப்பதற்கு இந்தியில்தான் படிப்போம் என்று அவர்கள் தலைவர் சொல்கிறார். அவர்கள் தலைவர் சொல்கிற ஒரு கருத்து, இவர் சொல்கிற ஒரு கருத்து. இரண்டிற்கும் எவ்வளவு பெரிய முரண்பாடு? இதுதான் பா.ஜ.க.–வினுடைய ஒட்டுமொத்த முரண்பாடு. மக்களை ஏமாற்றும் முரண்பாடு.அங்கேசொல்கிறார்;மத்தியப்பிரதேசத்தில்பேசும்போது இந்தி மொழியில்தான் மருத்துவப் படிப்பு படிக்க வேண்டுமென்று சொல்கிறார். அப்போது 15% reservation நாம் கொடுக்கிறோம். அதில் 15 விழுக்காடு இருக்கிறது. 12 விழுக்காடுதான் தமிழ்நாட்டு மாணவன் மத்தியப் பிரதேசத்திலோ, இராஜஸ்தானிலோ, குஜராத்திலோ, பஞ்சாபிலோ படிக்கும்பொழுது, அவன் எப்படி இந்தி படிப்பான்? மருத்துவம் என்பது ஆரம்பக் கல்வி கிடையாது. இது ஆதாரக் கல்வி. உயிர்களைக் காப்பாற்றும் கல்வி.

2022 அக்டோபர் 18] [திரு. கு. செல்வபெருந்தகை]

UNICEF-லிருந்து ஒரு letter வருகிறது. UNICEF-லிருந்து letter இந்தியிலா வருகிறது? ஆங்கிலத்தில் வருகிறது. அதை எப்படிப் படிக்க முடியும்? குறைந்தபட்சம் இந்த மக்கள்மீது அக்கறை இல்லாமல் இப்படி இந்தியைத் திணிக்க வேண்டும்; இந்து ஆள வேண்டும்; இந்துஸ்தான் ஆள வேண்டும் என்ற ஒரே முழக்கம்.

பிற்பகல் 12-55

நாக்பூரிலே இயற்றப்படுகின்ற திட்டங்களை இவர் நடைமுறைப்படுத்தி வருகிறார். இது, இந்தக் காலத்திற்குச் சாத்தியமா என்று பார்க்க வேண்டும். மொழி என்பது ஒரு தேன்கூடு. இந்தத் தேன்கூட்டில் பார்த்தீர்களென்றால், அழகான, இனிப்பான தேனும் கிடைக்கும்; ஆயிரக்கணக்கான குளவிகளும் இருக்கும்; அவை கொட்டினால் அது என்ன வலி என்பது, உங்களுக்குத் தெரியும். ஆகவே, எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை ஒன்றிய அரசு உடனே நிறைவேற்ற வேண்டும். இந்தித் திணிப்பை திரும்பப் பெற வேண்டும். எங்களது தாய்மொழிக்கு வயது 3,000 ஆண்டுகளுக்குமேல். நீங்கள் சொல்லும் மொழிக்கு வயது 100, 200 ஆண்டுகள்தான். இன்னும் சொல்லப்போனால், சுமார் 700, 800 ஆண்டுகள்தான், உங்களுடைய வரலாறு. உங்களுடைய வரலாறு எங்களுடைய வரலாற்றை ஒருபோதும் மறைக்கவும் முடியாது; மாற்றவும் முடியாது. தமிழ்மொழி உலகத்திலே மூத்த மொழி; இன்றைக்கு கீழடி நாகரிகம் பல உதாரணங்களை, வரலாற்றுச் சிறப்புமிக்க காரணிகளைச் சொல்லிக்கொண்டிருக்கின்றது. ஆகவே, நாங்கள் தமிழக மக்களுக்காகப் பேசுகிறோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம், தமிழுக்காக மட்டுமல்ல; 22 மாநில மொழிகளையும் பாதுகாப்பதற்கான தீர்மானம் இது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிற்கு வழிகாட்டுகின்ற தீர்மானம். அவர்கள் வேண்டுமானால் அக்கறை இல்லாமல் இருக்கலாம். இந்த மொழியைப் பாதுகாக்க வேண்டுமென்று நம்முடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அக்கறையோடு இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, காங்கிரஸ் பேரியக்கம் இதை ஆதரிக்கிறது. உடனே ஒன்றிய அரசு இதைத் திருத்திக்கொள்ள வேண்டும் அல்லது திரும்பப் பெற வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்திற்குச் செவிசாய்க்க வேண்டுமென்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

[*2022 அக்டோபர் 18*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: தமிழ் மொழியை, தமிழ்நாட்டை, தமிழக மக்களை தமது இதயத்தில் வைத்து, தங்களது உயிரினும் மேலாக நேசித்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழுக்கும் அமுதென்று பேர்–அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்"
என்று பாடினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.
'வீழ்வது நம் உயிராயினும் கவலையில்லை,
வாழ்வது அன்னைத் தமிழாய் இருந்திடல் வேண்டும்'

என்பான் உண்மைத் தமிழன். இந்த வீர முழக்கத்தை உயிர் மூச்சாகக் கொண்டு உருவான போராட்டம்தான் இந்தித் திணிப்பிற்கு எதிரான போராட்டம். இந்திக்கு எதிரான போராட்டம் என்பது *1930* ஆம் ஆண்டிலேயே ஆரம்பித்துவிட்டது. அனைத்துப் பள்ளிகளிலும் இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட்டுள்ளதாக *21–4–1938* அன்று உயர்திரு இராஜாஜி அவர்கள் தலைமையிலான சென்னை மாகாண அரசு அரசாணையை வெளியிட்டது. இதை எதிர்த்து தந்தை பெரியார், மறைமலை அடிகளார், சோமசுந்தர பாரதியார் உள்ளிட்டோரின் வழிகாட்டுதலில் போராட்டம் வெடித்தது. போராட்டத்தில் ஈடுபட்ட பெரியவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். சென்னையில் போராட்டத்தில் பங்கேற்று சிறைக்குச் சென்ற திரு. நடராஜன் அவர்களின் உடல்நலம் குன்றியது. மன்னிப்புக் கோரி கடிதம் எழுதித் தந்தால், விடுதலை செய்வதாக அரசு கூறியது. மன்னிப்புக் கேட்க மறுத்த திரு. நடராஜன் அவர்கள் *15–1–1939* அன்று உயிரிழந்தார். தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் பிறந்து, தமிழ் மொழி உணர்வால் உந்தப்பட்டு, போராட்டக் களத்திற்குச் சென்ற திரு. நடராஜன் அவர்கள்தான் மொழிப் போராட்டத்தின் முதல் களப் பலி. அவரைத் தொடர்ந்து, அதே ஆண்டு மார்ச் *12* ஆம் தேதி, கும்பகோணத்தைச் சேர்ந்த திரு. தாளமுத்து அவர்கள் சென்னை சிறையில் உயிர் நீத்தார்கள்.

2022 அக்டோபர் 18] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இந்த இரண்டு உயிர்ப் பலிகளால் இந்திக்கு எதிரான போராட்டம் மிகவும் தீவிரமடைந்தது. இந்த எதிர்ப்பின் காரணமாக, இந்தி பயிற்று மொழி தொடர்பான அரசாணையை 1940 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அரசு திரும்பப் பெற்றது.

அடுத்து, 1948 ஆம் ஆண்டில் ஓமந்தூரார் முதல்வராக இருந்தபோது, இந்தி கட்டாய பாடமாக்கப்படும் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதை எதிர்த்து மீண்டும் கிளர்ச்சி ஏற்பட்டதால் அரசு பின்வாங்கியது. மேலும், இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமும் ஆட்சி மொழியாகத் தொடரும் என்று அன்றைய மாண்புமிகு பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவின் உறுதிமொழியால் போராட்டம் சற்று ஓய்ந்தது. இந்நிலையில்தான், 26-1-1965 முதல் இந்திய ஆட்சி மொழியாக இந்தி மட்டுமே இருக்குமென்ற 1963 ஆம் ஆண்டின் ஆட்சி மொழி சட்ட மசோதாவால் மீண்டும் போராட்டம் உருவானது.

பிற்பகல் 1-00

பேரறிஞர் அண்ணா அவர்களது இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் இதனை முழு வீச்சுடன் எதிர்க்க, போராட்டக்களம் தீவிரமானது. அரியலூர் மாவட்டம், கீழப்பளுவூரைச் சேர்ந்த தி.மு.க. தொண்டர் சின்னச்சாமி, இந்தி மட்டும் ஆட்சி மொழியாக அரியணையில் அமர்வதைத் தடுத்தாக வேண்டும் என்று திருச்சி இரயில் நிலையம் எதிரே 25-1-1964 அன்று தீக்குளித்து தன்னுயிரை மாய்த்துக் கொண்டார். சின்னச்சாமியின் மரணம் அரசியல் எல்லையைக் கடந்து தமிழகத்திலே இருக்கின்ற எல்லா தரப்பினரையும் எழுச்சியூட்டியது. 25-1-1965 ஆம் தேதி நெருங்க நெருங்க போராட்டத்தின் எழுச்சி அதிகமாகிக் கொண்டே சென்றது.

1965 ஜனவரி 25 ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் மாணவர் இயக்கங்கள் கிளர்ச்சியில் இறங்கின. சென்னை மாநகராட்சி ஊழியராகப் பணியாற்றி வந்த கோடம்பாக்கம் சிவலிங்கம் அன்றைய தினம் தீக்குளித்து மாண்டார். மறுநாள் விருகம்பாக்கம் அரங்கநாதன் தீக்குளித்து இறந்தார். அதேநாளில், புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் முத்து என்பவர் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார். 27 ஆம் தேதி ஆயிரக்கணக்கான

[திரு. ஓ. பன்னீர்செல்வம்][2022 அக்டோபர் 18 மாணவர்கள் அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்கு ஊர்வலமாகச் சென்றபோது சிவகங்கை மாணவர் ராசேந்திரன் சென்னை துப்பாக்கிச்சூட்டில் பலியானார். அதன்பிறகு, போராட்டம் மேலும் மேலும் வேகமெடுத்தது. போலீஸ் துப்பாக்கிச்சூடு அதிகரிக்க உயிர்பலிகளும் அதிகரித்துக்கொண்டே சென்றன.

போராட்டத்தை ஒடுக்க இராணுவமும் வந்தது. பொள்ளாச்சியில் பிப்ரவரி 12 ஆம் தேதி இராணுவம் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 100-க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டார்கள். இதனிடையே இந்தித் திணிப்பிற்கு எதிராக காங்கிரஸ் கட்சிக்குள் சற்று எதிர்ப்பு கிளம்பியது. வேறு வழியின்றி, இந்தியுடன் ஆங்கிலமும் ஆட்சி மொழியாகத் தொடரும் என்ற முடிவுக்கு ஆட்சியாளர்கள் வந்தனர். இதனால், மாணவர்களின் 50 நாட்கள் போராட்டம் மார்ச் மாதம் 15 ஆம் தேதியன்று முடிவுக்கும் வந்தது. பேரறிஞர் அண்ணா அவர்களின் முன்முனைப்பின் காரணத்தால், மாணவச் செல்வங்களின் தீவிர போராட்டத்தால், மொழிப்போரில் தங்களின் எதிர்ப்பைக் காட்டி, செந்தணலில் வெந்து, சிறையில் வாடி, தன்னுயிரை நெருப்பிலே பொசுக்கிக் கொண்ட வீரத் தமிழர்களின் தீரமிகு தியாகத்தால் இந்தித் திணிப்பிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது தமிழகம்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக செயல்படுத்திய திட்டங்களை நான் எடுத்துச் சொன்னால், அந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகும் என்பதனை நினைவுகூர்ந்து, தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களும் தமிழ் மண்ணில் விதைத்துச் சென்ற தமிழ்மொழி உணர்வினை மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் வளர்த்துவிட்ட தமிழ்மொழியின் பெருமையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனது உயிர்க் கொள்கையாக என்றும் கட்டிக்காக்கும் என்பதனை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 8-வது அட்டவணையில் உள்ள தமிழ்மொழி உட்பட அனைத்து மொழிகளையும் அலுவல் மொழியாக்க வேண்டும் என்பதே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாகும். பேரறிஞர்

2022 அக்டோபர் 18] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து கடைப்பிடிக்கும். எந்தக் காலத்திலும் நமது அன்னைத் தமிழ்மொழியை மீறி இந்தித் திணிப்பு தமிழகத்திலே உள்ளே வர அனுமதிக்க மாட்டோம் என்பதனை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த அரசினர் தனித் தீர்மானத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முழுமனதுடன், ஏகமனதாக ஆதரிக்கிறது என்பதனையும் எடுத்துச் சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இம்மாமன்றத்திலே கொண்டுவரப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க, உணர்ச்சிமிக்க, எச்சரிக்கை விடுகின்ற ஒரு தீர்மானத்தை இந்த அவையிலுள்ள கட்சித் தலைவர்களெல்லாம் வரவேற்றிருக்கிறார்கள். நானும், எங்களது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அந்தத் தீர்மானத்தை மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-05

இந்த அவை பல நேரங்களில் சில ஆண்டுகளில் உணர்ச்சிப் பிழம்பாக மாறியிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், 3 அறிவிப்புகளைச் செய்தார்கள். இந்த மண்ணுக்கு, தாய் மண்ணுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டினார்கள். பொதுவாக, தாய்தான் மகனுக்குப் பெயர் சூட்டுவாள்; ஆனால் அதிசயம், மகன் தாய்க்குப் பெயர் சூட்டினார், இது 'தமிழ்நாடு' என்று. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, அவர் இரு மொழிக் கொள்கைதான் தமிழ்நாட்டில் இருக்கும்; தமிழ்+ஆங்கிலம் என்ற இரண்டாவது அறிவிப்பை அறிவித்தார்கள். மூன்றாவதாக, சுய மரியாதை திருமணங்கள் அரசியல் அங்கீகாரத்தைப் பெறும் என அறிவித்தார்கள். அன்றைக்கு நான் அவையின் மேற்புறம் உட்கார்ந்து அதைப் பார்த்தவன். இந்த அவை உணர்ச்சிப் பிழம்பாகி, அறிஞர் அண்ணா

[திரு. துரைமுருகன்] [2022 அக்டோபர் 18

அவர்கள், அவருடைய வயதையும் மறந்து, 'தமிழ்நாடு', 'தமிழ்நாடு' என்று சொல்ல, 'வாழ்க', 'வாழ்க' என்று மாமன்றத்திலிருக்கிற உறுப்பினர்களெல்லாம் குரல் கொடுத்தார்கள். அன்றைக்கு தமிழ்நாட்டின் சட்டமன்றம் உணர்ச்சியினுடைய வடிவாக நின்றது.

அதற்குப் பிறகு தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலக்கட்டத்தில், பல்வேறு நேரங்களிலே அது நடந்திருக்கிறது. மாநில சுயாட்சி வேண்டுமென்கின்ற ஒரு தீர்மானம், சூடு பறக்க இந்த அவையிலே நடந்து, கடைசியில் சூடும், சுவையும் நிறைந்த ஓர் உரையை தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றியபோது, இந்த அவை அன்றைக்கு உணர்ச்சிப் பிழம்பாக நின்றது. இதேபோல் இந்தியைத் திணிக்கின்ற ஒரு நிலைமை வந்த காலத்தில், அப்போதும் இதுபோன்ற உணர்ச்சிபூர்வமாக தலைவர் கலைஞர் அவர்கள் பேசினார்கள். ஆக, சில நேரங்களில் அத்தகைய சூழ்நிலை வருகின்ற சந்தர்ப்பத்தைப் பொறுத்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், அதே உணர்வை, அதே உணர்ச்சியை நான் இன்றைக்குப் பெற்றிருக்கிறேன்; இந்த மன்றம் பெற்றிருக்கிறது.

தலைவர் அவர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்து, தீர்மானம் கொண்டு வருகிறார் என்று சொன்னபோதே, எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் ஏதோ ஒன்று வரப் போகிறது என்ற உணர்ச்சியோடுதான் உட்கார்ந்திருந்தோம். காரணம், 1965-ல் தமிழ்நாட்டில் போராட்டத்தை முன்நின்று நடத்தியவர்களில் நானும் ஒருவன். முதன்முதலாக பச்சையப்பன் கல்லூரியில் 5 மாணவர்கள் கைது செய்யப்பட்டு மத்திய சிறையில் கொண்டுவந்து அடைத்தார்கள். அதில் நான், தி.க.-விலிருக்கிற துரைசாமி, அன்றைக்கு ஊட்டியிலிருந்து வந்த இராமன் என்கிற Presidency College-ஐ சேர்ந்த ஒரு மாணவன் ஆகியோர் அடங்குவர். மற்றவர்களோடு உட்கார்ந்திருந்த அறிஞர் அண்ணா அவர்கள் மதியழகனையும், என்னையும் அனுப்பினார்கள். ஏனென்றால், எங்களுடைய சட்டையை கழற்றி, ஜட்டியுடன் உட்கார வைத்திருந்தார்கள். தூரத்திலிருந்து பார்த்த அவர், நம்முடைய பையன்கள் போன்று தெரிகிறதே என்று எங்களை அழைத்துக்கொண்டார்கள். அன்றைக்கு அவரோடு இருக்கின்ற வாய்ப்பைப் பெற்றோம். அந்த உணர்வு, இந்தியை எதிர்ப்பது என்று சொன்னவுடன் இன்றைக்கு என் உள்ளத்தில் ஒரு பரபரப்பு, ஓர்

2022 அக்டோபர் 18] [திரு. துரைமுருகன்]

உணர்ச்சி, மீண்டும் தமிழகம் இந்தியை எதிர்ப்பதற்குத் தயாராகிறது என்கிற நிலை ஏற்படுகிறது. சுமார் 50, 60 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் நடந்தது. ஆனால், இன்றைக்கும் நடக்கிறது என்று சொல்கிறபோது, ஓர் உணர்ச்சிபூர்வமாக இருந்தது.

எங்கள் தலைவர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தில் அனல் இருந்தது; ஆனால், அவர் வகிக்கின்ற பதவியின் காரணமாக ஜுவாலை எழாமல் மிகத் தந்திரமான வார்த்தைகளால் அதை அடக்கி வாசித்தார்கள். அவருடைய உடலிலும், இரத்தத்திலும் அந்த உணர்வு ஓடிக்கொண்டிருக்கிறது. 14 வயதில் சொன்னார்கள். "ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இதுவல்லவே" என்று 14 வயதில் இந்த வார்த்தைகளை எழுதி, திருவாரூர் வீதிகளில் கோஷமிட்டு சென்றவர். (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்து, மாப்பிள்ளையாக மாலை போட்டு உட்கார்ந்திருக்கிறார்; இந்தி எதிர்ப்பு போராட்ட ஊர்வலம் போகிறது; அதிலே சேர்ந்துகொண்டு சென்றவரை police station*-ல் கொண்டு சென்று உட்கார வைத்தார்கள். கலைஞரினுடைய உணர்ச்சி குரலால், உள்ளமெல்லாம் உணர்ச்சிமயமாக்கிவிட்டு சென்றவர்.*

பிற்பகல் 1-10

அவருடைய இரத்தத்திலே உதித்தவர். ஆகையினால்தான் முதலில், இந்தத் தீர்மானத்தின் ஒரு வரியை அவர் படித்தபோது, அப்படியே அவருடைய கையைப் பிடித்துக்கொண்டு அழுதுவிடலாமா என்று நினைத்தேன். என்ன கூறினார் என்றால், 'இந்த தி.மு.க. தோன்றியதே இந்தியை எதிர்ப்பதற்காகத்தான்; (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய இலட்சியமே அதுதான்'. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த quote*-ஐ, இந்த வைராக்கியத்தைச் சொல்வதற்கு கலைஞர் அவர்களுடைய மகனால் மட்டும்தான் முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)*

தீர்மானத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் நான் படித்துப் பார்த்தேன். அவர் மிக அமைதியாகச் சொல்லிக்கொண்டே வந்தார். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே

[திரு. துரைமுருகன்] [2022 அக்டோபர் 18

சொன்னதைப்போல், 1938-ல் தொடங்கி, இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஒன்று தெரிகிறது, மத்தியில் யார் ஆட்சிக்கு வந்தாலும் சரி, எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி, ஆட்சிக்கு வருகின்ற வரை நம்மிடத்தில் சமாதானமாகப் பேசுவார்கள். வந்ததற்குப் பிறகு இந்தியைத் திணிப்பார்கள். இதில் யாருக்கும் மாறுபட்ட கருத்தே கிடையாது. ஆனால், நாம் என்ன சொல்கிறோம் என்றால், யாரோடு நாங்கள் தோழமையாக இருந்தாலும் சரி, இந்தியை எதிர்த்தே தீருவோம். (மேசையைத் தட்டும் ஒலி) அது எங்களுடைய கொள்கை. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் இங்கே சொன்னார். இந்தியை எதிர்ப்பதற்காகத்தான் நாங்கள் பிறந்தோம் என்று சொல்கின்ற ஒரு தைரியத்தை இந்த மாமன்றத்தில் முழங்கியிருக்கிறாரே, அது பெரிதுதான். இதுவொரு Magna Carta. இன்றைக்கு அவருடைய பேச்சு ஒரு Magna Carta போல் அமைந்தது.

அதுமட்டுமல்லாமல், நாங்கள் Medical College-ல் மட்டும்தான் இந்தியைக் கொண்டுவந்துள்ளோம் என்று இன்றைக்குச் சொல்கிறார்கள். ஆனால், நாளைக்கு Engineering College-ல் இந்தியில் படிக்க வேண்டுமென்று சொல்வார்கள். அடுத்த நாள் S.S.L.C.-க்கு கொண்டுவருவார்கள். இந்தியை மட்டும் நாம் நுழைய விட்டுவிட்டால், முதலில் காலை பிடிப்பார்கள், கடைசியில் சிண்டை பிடிப்பார்கள். ஆகையினால், எந்த ரூபத்திலும் தமிழ்நாட்டில் இந்தி நுழைவதற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, கட்சி இருக்கின்றவரையில் முடியாது. 'எந்தக் கொம்பனாலும்' இந்த நாட்டில் இந்தியை திணித்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, ஒருமுறை சொன்னதைப்போல், நாங்கள் எல்லோரும் செத்துவிட்டாலும்கூட, தமிழ்நாட்டில் பறக்கின்ற காகம்கூட இந்தியை எதிர்க்கும் என்று பேசுவார்கள் அந்தக் காலத்தில். ஆகையினால், அந்த உணர்வு நிலையிலே இருந்து, பொறுப்பின் காரணமாக, சொல்ல வேண்டியதை மிக நாகரிகமாக எடுத்து விளக்கியிருக்கிறார். எனவே, உணர்ச்சிமிக்க இந்தத் தீர்மானத்தை, நம்முடைய பாரம்பரியமான கொள்கையை உணர்வோடு படித்த, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மனமார பாராட்டுகிறேன்; போற்றுகிறேன்; புகழுகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி, இந்தத் தீர்மானத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2022 அக்டோபர் 18]

8. ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில் இந்தி மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்பன உள்ளிட்ட அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்ற குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஒன்றிய அரசினை வலியுறுத்தும் அரசினர் தனித் தீர்மானம்—பேரவைத் தலைவர் கருத்துரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒன்றிய அரசால், தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் உள்ள இந்தி பேசாத அனைத்து மாநிலங்களிலும் இந்தி மொழியைத் திணிக்க இருப்பதைக் கண்டித்து, நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின்மீது அவை முன்னவர் உட்பட, பேசியிருக்கின்ற மாமன்ற உறுப்பினர்களோடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் என்ற முறையில் ஓரிரு வார்த்தைகளைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.*

இந்தி படித்தால் அல்லது இந்தியில்தான் மருத்துவம் படிக்க வேண்டுமென்று இப்போது அவர்கள் சொல்லியிருப்பது, நூறாண்டுகளுக்கு முன்னால் நடந்ததை நினைவுபடுத்துகிறது. சமஸ்கிருதம் படித்தவர்கள், தெரிந்தவர்கள் மட்டும்தான் மருத்துவம் படிக்க முடியும் என்ற நிலை இருந்தது. 1920-ல் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், கேரளா, தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரா, கர்நாடகா மற்றும் ஒடிசாவின் ஒரு பகுதியை உள்ளடக்கிய மதராஸ் பிரசிடென்சிக்கு முதன்முதலாக சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றபோது, 1920 டிசம்பரில் நீதிக் கட்சி அத்தேர்தலில் வெற்றி பெற்றது. அதற்குப்பின் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக, 1921 ஆம் ஆண்டு, நீதிக் கட்சிதான் தமிழ்நாட்டில் வட்டார மொழிகளிலும், ஆங்கிலத்திலும் கல்வி கட்டாயம் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்தது; சட்டமாக்கியது. ஆனால், 1941 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியில் அது உறுதிப்படுத்தப்பட்டு, மீண்டும் ஆங்கிலத்திலும், தமிழிலும் படிக்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. அதற்குப்பின் மொழிவாரி மாநிலத்தில் தமிழில் படித்தோம். முதல் மொழி தாய் மொழி என்றுதான் இருந்தது. மாண்புமிகு மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் முதல் மொழி தமிழ் மொழி, இணைப்பு மொழி ஆங்கிலம் என்று கொண்டுவந்தார். அந்தப் பெருமை நம்முடைய மாண்புமிகு மறைந்த தலைவர் கலைஞர் அவர்களைத்தான் சாரும்.

[பேரவைத் தலைவர்] [2022 அக்டோபர் 18

பிற்பகல் 1–15

அவர் வழியில் இன்றும், 100 ஆண்டுகளுக்குப் பிறகும், தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து இந்தி பேசாத மாநிலங்களுக்கும் இப்படிப்பட்ட சோதனை ஏற்படுகின்றபோது, அதில் முதல் குரலாக தமிழ்நாட்டில் பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் வந்த நம்முடைய மாண்புமிகு இன்றைய முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தித் திணிப்புக்கு எதிரான இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதுமட்டுமல்ல; தமிழ்நாட்டில் மட்டுமல்ல; இந்தியாவில் உள்ள அனைத்து இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள இளைஞர்கள், இளம்பெண்கள் உலகம் முழுவதும் சென்று இப்போது படிப்பதற்கும், வேலை செய்வதற்கும் வாய்ப்புகளையெல்லாம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அதற்கு முட்டுக்கட்டை போடுவதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணர்ந்துதான், வருங்கால சந்ததி, இளைஞர், இளம்பெண்களுக்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே தவிர, இது தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து இந்தி பேசாத மாநில இளைஞர்களும் இதைப் பாராட்டுவார்கள், இதற்குத் துணை நிற்பார்கள், இதை எதிர்த்து நிற்பார்கள். இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பார்கள்.

ஆகவேதான், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள், மேற்கு வங்கத்தில் உள்ள ஒருவரை குறிப்பிட்டுச் சொன்னதுமாதிரி, 'தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அண்ணா, கலைஞர் போன்றோர் இல்லையென்று சொன்னால், எங்களுக்கு மொழிப் பற்று வந்திருக்காது, நாங்கள் ஆங்கிலப் புலமைப் பெற்று உலகம் முழுவதும் சென்றிருக்கமாட்டோம்' என்று எனக்கு அவர்தான் சொன்னார் என்று அவரை குறிப்பிட்டு சொன்னார்கள். அந்த அடிப்படையில் இந்தியாவிற்கே ஓர் எடுத்துக்காட்டாக, உலகம் முழுவதும் சென்று, நம்முடைய இளைஞர்கள் படிக்கவும், வேலை செய்யவும் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கின்ற இந்த அருமையான தீர்மானத்தை நானும் ஆதரிக்கின்றேன்.

தொடர்ந்து, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும்முகமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2022 அக்டோபர் 18] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (19–10–2022) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. (i) *29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–14)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 15-6-2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 96 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; மற்றும்* (ii) *அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 1975 ஆம் ஆண்டு சுங்கவரிச் சட்டத்தின்* (Customs Tariff Act) *(மத்தியச் சட்டம் 51/1975) முதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொருட்களுக்கு விதிக்கத்தக்க பெருமளவிலான மாநில வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 15-6-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 97 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றன.]*

2. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஆறாவது திருத்தம்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 31-8-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 109 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது.]